**சுருக்கம்**

பள்ளிக் கல்வித் துறை தொடர்பான சில அதிகாரங்களை ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதலாக வழங்குதல் – உயர்நிலைக்குழுவின் பரிந்துரைகள் மீது ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக் கல்வி (எஸ்.2) துறை

**அரசாணை (நிலை) எண். 90** **நாள்: 21.04.2008**

**படிக்கப்பட்டது:-**

1. அரசாணை (நிலை) எண்.248, பள்ளிக் கல்வி, நாள் 11.6.1997.
2. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறைச் செயலரின் நே.மு.கடிதம் எண். 30462/சி1/2006–13, நாள் 13.11.2007.

* * * * *

**ஆணை:–**

மேலே பார்வை 1–ல் படிக்கப்பட்ட அரசாணையில், பள்ளிக் கல்வி தொடர்பான சில அதிகாரங்களை உள்ளாட்சி அமைப்புகளுக்கு பகிர்ந்தளித்து ஆணையிடப்பட்டுள்ளது.

2) 12.10.2007 அன்று மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், உயர்நிலைக் குழுவின் பரிந்துரையை ஏற்று, தொடக்கக் கல்வி மற்றும் நடுநிலைப் பள்ளிகளை மேற்பார்வையிடும் அதிகாரம் ஊரக ஊராட்சித் தலைவருக்கும், ஊராட்சி ஒன்றியத் தலைவருக்கும் வழங்கப்பட வேண்டும் என்றும் அரசாணை (நிலை) எண்.248, பள்ளிக் கல்வி, நாள்.11.06.1997ல் வெளியிடப்பட்டுள்ள ஆணைகளை மீண்டும் வலியுறுத்தி ஆணையிட வேண்டுமென்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது.

3) மேற்படி முடிவின் அடிப்படையில் அரசாணை (நிலை) எண்.248, பள்ளிக் கல்வி, நாள் 11.06.1997ல் வெளியிடப்பட்டுள்ள கீழ்க்காணும் ஆணைகளை மீண்டும் வலியுறுத்தி அரசு ஆணையிடுகிறது.

அ) ஊராட்சித் தலைவர்கள், நகராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள், மாவட்ட ஊராட்சித் தலைவர்கள், பள்ளிக்கூட கட்டடம், கழிப்பறைகள் ஆகியவற்றை பழுது பார்த்தல், பராமரிப்பு செய்தல், குடிநீர் வசதி செய்து தருதல் போன்றவற்றைக் கவனித்தும், பள்ளிகளை பார்வையிட்டும் உதவி தொடக்கக் கல்வி அலுவலர்களுக்கு அறிக்கை அனுப்பலாம்.

ஆ) அவர்கள் அளித்த அறிக்கை அடிப்படையில் உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள், ஊராட்சி ஒன்றிய மாதாந்திர கூட்டத்தில் கலந்து கொண்டு எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்து அறிக்கை தர வேண்டும்.

இ) மாவட்டத் தொடக்கக் கல்வி அலுவலர்கள், உதவித் தொடக்கக் கல்வி அலுவலர்கள் எடுக்கும் நடவடிக்கையினை ஆய்வு செய்து ஒரு மாத காலத்திற்குள் நடவடிக்கை எடுப்பதை உறுதி செய்ய வேண்டும்.

4) மேற்காணும் ஆணையின் அடிப்படையில் தக்க நடவடிக்கை மேற்கொண்டு, சார்நிலை அலுவலர்களுக்கு உரிய அறிவுரைகள் வழங்குமாறு தொடக்கக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

ம. குற்றாலிங்கம்,
அரசு செயலாளர்.

பெறுநர்
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை – 6.
இயக்குநர், ஊரக வளர்ச்சித் துறை, சென்னை.
செயலாளர், ஊரக வளர்ச்சி (ம) உள்ளாட்சித் துறை, சென்னை–9.

<u>நகல்</u>:
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை – 6.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்